## மூன்றாம் கூடுதல் மாவட்ட/அமர்வு நீதிமன்றம், சேலம்

முன்னிலை - திரு.வே.புகழேந்தி, இளநிலைச் சட்டம்,
மாவட்ட நீதிபதி

**2025–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 05–ஆம் நாள் புதன்கிழமை**

**திருவள்ளுவர் ஆண்டு 2056 ஐப்பசித் திங்கள் 19ஆம் நாள்**

**முதலேற்பு வழக்கு எண்.345/2024 –ல்**
**வழக்கிடை விண்ணப்ப எண் 01/2024**

**சீனிவாசன்** ...**மனுதாரர்/வாதி.**

**–எதிர்–**

**கோகிலா** ... **எதிர்மனுதாரர்/02–ஆம் பிரதிவாதி.**

இந்த மனு இன்று 05.11.2025-ஆம் தேதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரருக்காக வழக்குரைஞர் தி**ரு.P.கண்ணன்** அவர்களும் வழக்குரைஞர் மூலம் முதலேற்பு வழக்கில் தோன்றிய எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் இந்த மனுமீது எதிர்மனுதாரர்/02-ஆம் பிரதிவாதியை தோன்றாத் தரப்பினராக ஆக்கி பிறப்பித்த ஆணையை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்காத நிலையில் மனுதாரர் தரப்பு வாதங்களை கேட்டும் வழக்குக் கோப்புகளை பரிசீலித்தும் இந் நாள்வரை நிலுவையில் இருந்துவந்த இந்த மனுவில் இந் நீதிமன்றம் இன்று ஆணை பிறப்பிக்கிறது.

### ஆணையுரை

தீர்ப்புக்குமுன் பற்றுகை செய்யக் கோரி மனுதாரர்/வாதி உரிமையியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் 38-ஆம் வகுமுறையின் 05-ஆம் விதியின்கீழ் இந்த மனுவை தாக்கல்செய்துள்ளார்.

IIIrd ADJ Court, Salem

## மனுவின் சுருக்கம்

01. மனுதாரர் முதலேற்பு வழக்கில் வாதி ஆவார். எதிர்மனுதாரர் முதலேற்பு வழக்கில் 02-ஆம் பிரதிவாதி ஆவார். எதிர்மனுதாரர்/02-ஆம் பிரதிவாதியும் 01-ஆம் பிரதிவாதியும் கடனுறுதிச் சீட்டுமீது வாதியிடம் வாங்கிய18 இலட்சம் உரூபாய் கடனை திரும்ப வசூலிக்க மனுதாரர்/வாதி முதலேற்பு வழக்கைத் தாக்கல்செய்துள்ளார்.

02. சேலம் மாவட்டம், வாழப்பாடி வட்டம், சிங்கிபுரம் ஊரில் இந்த மனுவில் குறிப்பட்டுள்ள சொத்து எதிர்மனுதாரர்/02-ஆம் பிரதிவாதிக்குச் சொந்தமானதாக உள்ளது. மனுதாரர்/வாதியை ஏமாற்றும் நோக்கத்தில் அந்தச் சொத்தை எதிர்மனுதாரர்/02ஆம்பிரதிவாதி விற்கப் போவதாக வாழப்பாடி ஊரைச் சேர்ந்த அருள்மணி என்பவருக்கு மனுதாரர்/வாதி தகவல் சொன்னார். எதிர்மனுதாரர்/02-ஆம் பிரதிவாதி அவ்வாறு ஏதேனும் செய்துவிட்டால் மனுதாரர்/வாதிக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பும் இன்னலும் ஏற்படும். ஆகையால், எதிர்மனுதாரர்/02-ஆம் பிரதிவாதியின் மனுவில் கண்டுள்ள சொத்தை தீர்ப்புக்குமுன் பற்றுகை செய்ய ஆணையிட வேண்டும்.

## எதிருரையின் சுருக்கம்

03. இந்த மனுமீதான நடவடிக்கையில் வழக்கின் தொடக்கத்தில் 02-ஆம் எதிர்மனுதாரர் தோன்றாத் தரப்பினராகி உள்ளார். பின்னிட்டு வழக்கறிஞர் மூலம் தோன்றிய எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் இந்த மனுமீது எதிர்மனுதாரர்/02-ஆம்பிரதிவாதியை தோன்றாத் தரப்பினராக ஆக்கி பிறப்பித்த ஆணையை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை.

## தீர்வுகாண வேண்டிய விவாதக்கூறுகள்

**04. இந்த மனு அனுமதிக்கத்தக்கதா?**

## தீர்முடிவு

**05.** இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்குக் கோப்புகள் ஓர்வுசெய்யப்பட்டன. பிரதிவாதி 19.04.2023-ஆம் தேதியிட்ட வாதியின் நலச்சார்பாக 18 இலட்சத்திற்கு நிறைவேற்றிக் கொடுத்த கேட்பு கடனுறுதிச் சீட்டுமீது மனுதாரர்/வாதி பிரதிவாதிக்கு எதிராக முதலேற்பு வழக்கைத் தாக்கல்செய்துள்ளார். அசல் கடனுறுதிச் சீட்டு வழக்குரையுடன் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

**06.** கடனுறுதிச் சீட்டின் நிறைவேற்றாளர்களுள் ஒருவரான எதிர்-மனுதாரர்/02-ஆம் பிரதிவாதிக்கு மனுச் சொத்து சொந்தமானது என்றும் மனுதாரர்/வாதியின் கடனை ஏமாற்றும் நோக்கத்தில் அச் சொத்தை விற்க அவர் நடவடிக்கை எடுத்துவருவதாகவும் மனுதாரர்/வாதி சத்தியப் பிரமாணம்மீது கூறியுள்ளார். அந்த சங்கதி உண்மைதான் என்று வாழப்பாடி ஊரைச் சேர்ந்த காசிவிஸ்வநாதன் மகன் அருள்மணி சத்தியப்பிரமாணம்மீது கூறியுள்ளார்.

**07.** முதலேற்பு வழக்கில் வழக்குரைஞர் மூலம் தோன்றிய எதிர்/ மனுதாரர்/02-ஆம் பிரதிவாதி இந்த மனுமீதான நடவடிக்கையில் தோன்றாத் தரப்பினராக உள்ளார். எதிர்மனுதாரர்/02-ஆம் பிரதிவாதி மனுதாரர்/ வாதியின் கூற்றும் கோரிக்கையும் உண்மை இல்லை என்று மனுவில் மறுத்துக் கூறாத நிலையில் மனுதாரர்/வாதியின் கூற்றினை நிராகரிக்க முகாந்திரம் இல்லை. ஆகையால், இந்த மனுவை அனுமதிப்பதே உகந்தது என்று இந் நீதிமன்றம் முடிவு செய்கிறது.

IIIrd ADJ Court, Salem

**இறுதிமுடிவு**

08. இறுதியாக இந்த மனு அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர்/வாதி முதலேற்பு வழக்கில் கோரியுள்ள கடன் தொகைக்கு 19.11.2025-ஆம் தேதி-யன்றுக்குள் உரிய பிணையம் வழங்க வேண்டும் என்று எதிர்மனுதாரர்/ 02-ஆம் பிரதிவாதிக்கு ஆணையிட்டும் அவ்வாறு வழங்கத் தவறினால் மனுச் சொத்து தீர்ப்புக்குமுன் பற்றுகை செய்யப்படும் என்று ஆணையிட்டும் இந்த மனுவில் இந்நீதிமன்றம் ஆணை பிறப்பிக்கிறது.

**இந்த ஆணையுரை என்னால் நேரடியாக சுருக்கெழுத்தருக்குச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சுச் செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2025 ஆம் ஆண்டு நவம்பர்திங்கள் 05–ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.**

**(ஒப்பம்)வே.புகழேந்தி**
**மூன்றாம் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**சேலம்.**

**இணைப்பு:–** இல்லை

III rd ADJ Court, Salem

உண்மை/வரைவு ஆணையுரை

முதலேற்பு வழக்கு எண் 345/2024–இல்

வழக்கிடை விண்ணப்ப எண். 01/2024

நாள் 05.11.2025

III rd ADJ Court, Salem